
ஸ்வஸ்திஸ்ரீ யின்
ராஜ சேவை
டைரக்ஷன்: K. காமேஸ்வர ராவ்

# ஸ்வஸ்திஸ்ரீயின்

# ராஜசேவை

★

**நடிகர்கள் :**

N. T. ராமாராவ்

S. V. ரங்காராவ்

T. S. பாலையா

P. S. வீரப்பா

T. R. ராமச்சந்திரன்

V. நாகையா

O. A. K. தேவர்

ராஜநல

மஹங்காளி வெங்கய்யா

மாஸ்டர் பாலாஜி

**நடிகைகள் :**

சௌகார் ஜானகி

P. கண்ணம்பா

கிரிஜா

மோகனா

குசலகுமாரி

விஜயலக்ஷ்மி

கௌரவ நடிகை

**S. வரலக்ஷ்மி**

# ராஜசேவை

## கதையின் சாரம்

அருந் தவப் புதல்வனின் பிறந்தநாள் வைபவத்தை விஜயபுரி காவலன் விஜயவர்மனும், பத்தினி சுமதியும் கொண்டாடும் சுபதினத்தில் மன்னனிடமிருந்து அவசர அழைப்பு வருகிறது. தேவி பூஜைக்குத் திரும்பிவிடுவ தாக மனைவியிடம் கூறி அரச சபைக்குப் புறப்படுகிருன் விஜயவர்மன்.

மக்கட்பேறில்லாத மன்னன் மகிபாலன், சகோதரன் விக்ரமனின் மைந்தன் உத்தமகுமாரை அபிமான புத்திர ஞக வளர்த்து வருகிருன். அண்ணனின் அறியாமையைப் பயன் படுத்திக்கொண்ட விக்ரமன் ஆட்சியின் அதிகா ரத்தை கைப்பற்றிக் கொள்கிருன். வேட்டைக்குச் சென்ற விக்ரமன் எல்லைப்புற மலைவாசிகளின் தலைவன் பொம் மண்ணுவின் மகள் கௌரியின் கற்பைக் கெடுத்து மணந்து கொள்ளுவதாக வாக்களித்து ஏமாற்றுகிருன். இதனுல் மலைநாட்டார் எதிர்ப்பு ஏற்படும் என்று பயந்து சிற்றரசர் களின் சகாயத்தை நாடி சபை கூட்டுகிருன். அதே சபை யில் பொம்மண்ணு கர்ப்பவதியான தன் மகள் கௌரியை அழைத்துக்கொண்டு வருகிருன். விக்ரமனுல் நிராகரிக்கப் பட்ட கௌரி அந்தச் சபையிலேயே தற்கொலை செய்து கொள்ளுகிருள். இதைக் கண்டு ஆவேசங்கொண்ட பொம்மண்ணு, அரச குடும்பத்தையே அழித்து விடுவதாக சபதம்செய்து மகளின் சவத்தைத் தூக்கிக்கொண்டு புறப்படுகிருன். பொம்மண்ணுவைக் கைது செய்ய உத்தரவிடுகிருன் விக்ரமன். இதை அநியாயம் என்று எதிர்க்கிருன் விஜயவர்மன். பொம்மண்ணு தப்பிச் செல் கிருன். இதற்கு உடந்தையாக இருந்ததாக விஜயவர்மன் சிறையிலடைக்கப்பட்டு, அவன் அரண்மனையும் தீக்கிறை யாக்கப்படுகிறது. தேவாலயத்திற்குச் சென்ற சுமதி

விபரம் தெரிந்து குழந்தையுடன் நாட்டைவிட்டு வெளியேறுகிருள்.

தன் பொருட்டு சிறை புகுந்த விஜயவர்மனே சிறையினின்றும் வெளியேற்றிச் செல்கிருன் பொம்மண்ணு. விஜயவர்மனைத் தேடிப் பின் தொடர்கிருன் சேனுதிபதி வீரவர்மன். பொம்மண்ணுவின் நாடகத்தில் ஏமாந்த வீரவர்மன், விஜயவர்மன் இறந்துவிட்டதாக எண்ணி, அடையாளத்திற்கு அவன் தலைப்பாகையும், கத்தியும் எடுத்துக்கொண்டு நாடு திரும்ப, வழியில் ஒரு பாழடைந்த மலைக் கோயிலுக்கருகில் களைப்பாற வீரர்களுடன் தங்குகிருன். இதற்கு முன் வேருெரு பக்கம் குழந்தையுடன் உறங்கிக் கொண்டிருக்கிருள் சுமதி. வீரர்களின் ஆர்ப்பாட்டத்தில் வெளியில் வந்த குழந்தையைக் கண்ட வீரர்கள், ஆண்டவன் அருளுடன் அனுப்பிய பிள்ளை என்று வீரவர்மனிடம் ஒப்படைக்கிருர்கள். குழந்தையின் அழுகுரல் கேட்டு விழித்த சுமதி, உண்மை அறிந்து, பிள்ளையின் நலங் கருதி வீரவர்மன் இல்லத்தில் பெற்ற பிள்ளைக்கே தாதியாக, வருகிருள். மறைந்த மாவீரன் விஜயவர்மனின் ஞாபகமாக குழந்தைக்கு விஜயகுமார் எனப் பெயரிடுகிருன் வீரவர்மன். கணவனின் மறைவு கேட்டு மனமுடைந்த சுமதி தீர விசாரித்து முடிவுசெய்யத் தீர்மானிக்கிருள். மலைக் குகையில் விஜயவர்மன் முகமூடியுடன் சுக்ரதாராவாக மாறுகிருன்.

வெகு காலத்திற்குப் பின் மன்னனுக்கு பெண் குழந்தை ஒன்று பிறக்கிறது. அது தன் பிள்ளையின் பிற்கால வாழ்விற்கு பாதகமாக இருக்குமென நினைத்து, அதற்கு ஒரு முடிவு கட்ட முயற்சிக்கிருன் விக்ரமன். அந்த ஆபத்திலிருந்து, மன்னன் மகளைக் காப்பாற்றி, மகாராணியாக்கும்வரை நித்திரை செய்யப் போவதில்லை என்று மலைவாசிகளுடன் சபதம் செய்கிருன் சுக்ரதாரா. அந்த சுக்ரதாராவை சித்ரவதை செய்யாமல் நித்திரை செய்யப் போவதில்லையென அண்ணன் முன் சபதம் செய்கிருன் விக்ரமன்.

வருடங்கள் பல உருள்கின்றன. வீரவர்மனிடம் விஜயகுமாரும், சுக்ரதாராவிடம் ராஜகுமாரியும், மன்னனிடம் உத்தம குமாரும், வளர்ந்து வாலிபப் பருவம் அடைகின்றனர்.

அவதாரம் என்னும் நண்பனுடன் விஜயகுமார் போர்ப் பயிற்சி சாலையில் நடக்கும் பயிற்சிகளுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கிறான். அங்கு வந்த உத்தம குமாருக்கும், அவதாரத்துக்கும் ஏற்பட்ட சச்சரவில் கலந்து கொண்ட விஜயகுமார் மன்னன்முன் கொண்டுபோகப் படுகிறான். அப்படிப்பட்ட வீரனாக இருந்தால், விஜய தசமியன்று ஆஸ்தான மல்லனிடம் வெற்றி கண்டு, மன்னரின் வெகுமதியைப் பெறவேண்டுமென கட்டளையிடுகிறான் விக்ரமன், அப்போது உத்தம குமாரை இளவரசனாகப் பிரகடனம் செய்வதாகக் கூறுகிறான் மன்னன். இச்செய்தி அறிந்த சுக்ரதாரா உத்தம குமாரை சிறை கொண்டு செல்கிறான். சுக்ரதாராவையும், உத்தம குமாரையும் ஆறு மாதத்திற்குள் கொண்டு வராவிட்டால், தலை போய் விடுமென்று வீரவர்மனுக்கு உத்திரவிடுகிறான் விக்கிரமன். வீரவர்மனுக்கு நல்வாக்குக் கூறி உத்தம குமாரை மீட்கவும், சுக்ரதாராவைக் கண்டு பிடிக்கவும், அவ்தாரத்துடன் வெளியேறுகிறான் விஜயகுமார்.

பல இடங்களைச் சுற்றிய விஜயகுமாரும், அவதாரமும், கடைசியில் காட்டிலுள்ள ஒரு பாட்டியின் வீட்டை அடைகிறார்கள். மறுநாள் சுக்ரதாராவுக்காகச் சென்ற விஜயகுமார், வழியில் ஆபத்தில் சிக்கிய அபலைப் பெண்ணைக் காப்பாற்றி அவள் மீது காதல் கொள்கிறான். அவளே சுக்ரதாராவிடம் வளரும் ராஜகுமாரி.

மன்னன் கொடுத்த கெடு பதினைந்து நாட்களில் பூர்த்தயாகிறது என்றுணர்ந்த அவதாரம், அதிர்வேட்டுக்கு எதிர்வேட்டு ஒன்று போடாவிட்டால் வந்த காரியம் பலிதமாகாது என்று, விஜயகுமாருக்கு வக்ரதாரா எனப் பெயரிட்டு, அதை பாட்டியிடம் தெரிவிக்கிறான். அப்போது

இதைக் கேட்டுக்கொண்டு வந்த பொம்மண்ணு, சுக்ர தாரா வின் சாமர்த்தியத்தைக் காட்ட எண்ணி ஏமாற்றமடை கிருன். அந்தக் கோபத்தில் விஜயகுமாரை பொம்மண்ணு வும், அவதாரத்தை அவன் ஆட்களும், கைதுசெய்து சுக்ர தாரா குகைக்கு கொண்டு போகிருர்கள். அங்கு வீரப் போட்டியில் வெற்றி கண்ட விஜயகுமாருக்கு வேண்டிய வசதிகளும், இக்கட்டான நிலையிலுள்ள அவதாரத்துக்கு சிறைவாசமும் கிடைக்கின்றன. வக்ரதாராவைக் கண்டு பிடிக்க எல்லைபுற வீரர்களுக்கு உத்திரவிடச் செல்கிருன் சுக்ரதாரா. காளி பூஜையில் மெய்மறந்து மலைவாசிகள் ஒன்றுபட்டு இருக்கிருர்கள். இந்த சந்தர்ப்பத்தை எதிர் பார்த்த வக்ரதாரா மாறு வேஷத்துடன் சென்று சிறை யிலுள்ள அவதாரம், உத்தம குமாரை விடுவித்து, ராஜ குமாரியுடன் தன் நாட்டிற்கு அனுப்பிவிட்டு, சுக்ர தாராவை அவன் எல்லையிலேயே சந்திக்க நிருபம் ஒன்று அனுப்புகிருன். இதுகண்டு ஆத்திரம் கொண்ட சுக்ர தாரா வக்ரதாராவை எதிர்த்து வருகிருன். இருவருக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் வக்ரதாரா வீழ்ச்சி அடையும் சமயம், அவன் கழுத்தில் கண்ட ரக்ஷையிைல் திகைப்புற்ற சுக்ரதாரா, வக்ரதாராவால் கைது செய்யப்பட்டு சிறையி லடைக்கப்படுகிருன்.

சிறையிலடைபட்ட சுக்ரதாரா என்னவாகிருன்? சுக்ரதாரா, வக்ரதாரா, தந்தையும் மகனும் என்பது எப்படி வெளியாகிறது? தாதியே தன் தாய் என்று எப்படித் தெரிந்துகொள்ளுகிருன் விஜயகுமார்? வஞ்சக ஞன விக்ரமன் சூழ்ச்சிகளின் விளைவு என்ன? காணுமல் போன ராஜகுமாரியை மன்னன் திரும்ப அடைவது எப்படி? வெள்ளித்திரை விளக்கம் கூறும்.

---




## 1

பாடியவர்: **P. லீலா**

கொஞ்சும் கண்ணே குமாரா
கோமானே புவன தீரா
குறைதீர்க்கும் இதய சோரா
கொஞ்சும் கண்ணே குமாரா (கொஞ்)

வண்ணத் தமிழ்க் கலை மாதாகொஞ்சி
வாழ்வில் இன்பம் பெறவே, வாரி முத்தம் தரவே.
கண்ணே கவலை தீர—தூய
கலையாய் பிறந்த ஜோதி நீயே. (கொஞ்)

வீரம் தழைக்கும் வேரில் பிறந்தாய்
விண்மதி போல வளர்ந்தாய், கண்மணியாக திகழ்ந்தாய்
ஆர்வம் பொங்கும் தமிழா—வீரத் தமிழா—உனக்கு
இணையே யாரும் இல்லை ராஜா (கொஞ்)

## 2

பாடியவர்: **S. ஜானகி**

மலரும் காலம் தவறிப் போனால்
மணமும் கானில் வீசாது - ஆசை
மனமும் அடைய தேடாது. (மலரும்)

மன்னா உன் நேராய் இந்த
மயிலாடும் ஜோராய் - பாரும்
கலை அரசே, கண்ணாலே

பாரில் காணாத செல்வம் நீ என்றே
நின் காதலாகினேன். (மலரும்)

கலைஞானே தேனே
எழில் ராணி நானே
அமரஜோதியை போல்
எந்நாளும் நமது வாழ்நாளும் - மன்னா என் கண்ணா
நம் ஆவல் தீரவே. (மலரும்)

## 3

பாடியவர்: **திருச்சி லோகநாதன்**
**A. L. ராகவன்**

பலே பேர்வழி கண்ணப்பா—இன்னும்
பாரா முகமும் என்னப்பா
பாயா சுருட்டிய வீரப்பா
மாயா ஜாலன் நீயப்பா—புவி
பக்த கோடிகளை பாரப்பா. (பலே)

கடமை தவறாத நல்ல மனிதர்களை
காட்டுலே போட்டு வாட்டி வதைக்கிறே
கணவனும் மனைவியும் கன்றுடன் பசுவும்
கதறித் தவித்திட பிரிய வைக்கிறே.
கைக்குள்ளே சொர்க்கத்தைக் காட்டும்
கை காரப்பா கேளப்பா (பாயா)

## 4

பாடியவர்: **S. ஜானகி**
**A. L. ராகவன்**

பெண்: காடே கௌதாரிகளே...!
காடே கௌதாரிகளே ஏப்பம் விடும்
காட்டுப்பூனை

இங்கையும் இருக்குதடா சிங்கா, சிங்கா—அது
எங்கையும் இருக்குதடா சிங்கா சிங்கா

ரைய்யான் ரப்பான் ஒங்க
கொய்யான் கொப்பான் சாமி

ராவோ நைஞு ஜோடி மைஞு
(அப்போ. ரைய்யான்)

ஆண் : காடே கௌதாரி யென்ன...ம்...அடியே
காடே கௌதாரி யென்ன மனுஷனையே
ஏப்பம்விடும்

காரியப் பூனை இருக்கு—சுய
காரியப் பூனை இருக்கு சிங்கி சிங்கி

பெண் : புலியெ பாத்துகிட்டு பூனை சூடு போட்டுகிட்டு
பூச்சாண்டி காட்டுதடா சிங்கா சிங்கா—அது
பூச்சாண்டி காட்டுதடா சிங்கா சிங்கா

ஆண் : பூச்சாண்டி காட்டினாலும்—ஹு
பூச்சாண்டி காட்டினாலும் புடலங்கா பாம்பாகி
புஸ்ஸுன்னு சீருது சிங்கி சிங்கி—அது
புஸ்ஸுன்னு சீருது சிங்கி சிங்கி

பெண் : என்ன அதிசயம்?

ஆண் : இருக்கு ரகசியம்?

பெண் : ம். இருக்குதா?

ஆண் : உ. ஊ. இருக்குது?

பெண் : ட்ரியோ ட்ரியோ ட்ரியோ ட்ரியோ!
ட்ரியோ செம்மறியாடு கூட்டத்திலே குள்ளநரி
திம்தடகா போடுதடா சிங்கா சிங்கா—அது
திம்தடகா போடுதடா சிங்கா சிங்கா—

ஆண் : திம்தடகா நரியெ பாத்து ஸம்பிம்பிம்
ஸக்ரிதிபூந்தி—அலக்

திம்தடகா நரியெ பாத்து ராம்தடகா
போட ஒரு
வேங்கைபுலி காத்திருக்கு சிங்கி சிங்கி

பெண்: ஊரெ கெடுத்துபிட்டு ஒதிய மரம் போல
உல்லாசமா இருக்குறுனே சிங்கா சிங்கா—அவன்
உல்லாசமா இருக்குறுனே சிங்கா சிங்கா

ஆண்: அவனை வேரோட வெட்டிவிட—அ. ஸதக்...
வேரோட வெட்டிவிட வீச்சருவா ஏந்திகிட்டு
வேவுகாரன் காத்திருக்கான் சிங்கி சிங்கி
(அப்போ. ரையான்)

## 5

பாடியவர்: **P. லீலா குழுவினர்**

**கண்ணுன** கண்மணியே கலி தீர்க்க வந்தவளே (கண்ணுன)
பொன்னுன சிலையே புகழ் மேவும் கலையே
புவியாளப் பிறந்தவளே (கண்ணுன)
வீரப்புலி ஈன்ற வித்தாகப் பிறந்தாய்
விதியின் சதியாலே நிலைமாறி வளர்ந்தாய்
பாரில் உனைத்தந்த உயிர்த் தந்தை போலே
பேரோடு புகழாலுல் மகிழ்வேன் தன்னுலே
கண்ணுன கண்மணியே கலிதீர்த்த விண்மணியே
வில்லம்பின் முன்னுலே வீரம் நில்லாது—உன்
சொல்லம்பின் முன்னுலே எதுவும் செல்லாது
வீர மணியாக எந்நாளும் நீயே
விளங்கிடும் நிலைகண்டு மகிழ்வோமே தாயே
கண்ணுன கண்மணியே கலிதீர்க்க வந்தவளே
வேதாந்த கலையோடு ஒளி வீச வேண்டும்
விஞ்ஞான அறிவோடு விளையாட வேண்டும்
வருங்கால வீரனென்று உலகோர் கொண்டாட

வாழ்நாளில் காணுத புகழ் வாங்கவேண்டும்
கண்ணுன கண்மணியே கலிதீர்த்த விண்மணியே

## 6

பாடியவர்: **சுசீலா**
**கண்டசாலா**

**விஜயகுமார்:** முடியாது சொல்ல முடியாது என்று
முன்னும் பின்னுமா தவிக்கிறே—அது
முடியா விட்டாலும் படியா விட்டாலும்
முடியுமென்று நான் நினைக்கிறேன்

**ராஜகுமாரி:** படியாது இது படியாது என்னை
பார்த்து பார்த்து ஏன் தவிக்கிறே
விடியு முன்னலே வெள்ளி நிலவுபோல்
விலகிடுவாய் என்று நினைக்கிறேன்—நீ

**விஜயகுமார்:** விலகாது உள்ளம் விலகாது என்று
வெளியில் சொல்லவும் தவிக்கிறே
இளங்காதல் இன்பம் ஏந்த நாளுமே
இனிக்குமென்று நான் நினைக்கிறேன்

**ராஜகுமாரி:** அசையாது ஒன்றும் அசையாது—விணில்
ஆவலோடு ஏன் தவிக்கிறே
இசைபாடி காதல் மொழி பேசி என்னை
ஏமாற்றுவாய் என்று நினைக்கிறேன்—நீ

**விஜயகுமார்:** நிலையான சந்திரன் திசை மாறினலும்
நிலைக்குமென்று நான் நினைக்கிறேன்
—காதல்

**ராஜகுமாரி:** இது நிஜமாகுமானல் மனம்போல வாழ்வு
நிலைக்குமென்று நான் நினைக்கிறேன்
—காதல்

## 7

பாடியவர் : **சுசீலா**

**கண்டசாலா**

விஜயகுமார் : தூது செல்லாயோ தினம்
காதல் கதைகள் பேசும் நிலவே (தூது)

ராஜகுமாரி : சேதி சொல்லாயோ எழில் ஜோதியாய்
உலாவும் நிலவே (தூது)

விஜயகுமார் : கண்ணிலாடும் பாவையாலே
புன்னகையின் பார்வையாலே
என்னையே நான் இழந்ததாலே
எனது நிலையை சொல்லவே (தூது)

ராஜகுமாரி : கணையில் வீழ்ந்த மானைப்போலே
கனவிலும் உன் நினைவினாலே
வானமுலாவும் கோகிலமே
வாருமென்று கூவுதென்ற (சேதி)

## 8

பாடியவர் : **ஜானகி**

**ராகவன்**

அலங்காரம் : கோணங்கி குல்லா போட்டு
குருவிகிட்ட ஜோசியங் கேட்டு
கும்மாளம் போடாதே மாமா—ஓ
டிங்கிரி டோமா
சும்மா நீ துள்ளாதே மாமா

அவதாரம் : பொல்லாத மம்முத ராஜன்
வில்லாலே அடிச்சதினாலே

சொல்லாமல் ஓடிவந்தேனே—உன்
உள்ளமுந்தானே
கல்லோ கற்கண்டோ அறியேனே

அலங்காரம் : ஆசை யாவும் அறுபது நாளு
மோகம் யாவும் முப்பது நாளு
நேசம் யாவும் உடனே மறந்து
நீ யாரோ நான் யாரோவென
ஜம்பமாக பேசி காட்டுவார்

அவதாரம் : ஐயஹோ ! என் மேனகி !
பொன்னை விட்டு ஒளி போனாலும்
பூவைவிட்டு மணம்போனாலும்
உன்னை விட்டு நான் போவேனோ
போனாலும் உயிர் வாழ்வேனோ
என்னை விட்டு நீயும் போகாதே
ஏஹே ! ரம்பையின் மகளே
கண்ணை விட்டு நீயும் மறையாதே.

விஜயகுமார் : அழகான காதலின் ஜோடி அனுராகம்
மேவிடும் ஜோதி

ராஜகுமாரி : நிலையான இன்பத்தினாலே நீல வானும்
மதியும்போல

இருவரும் : பழகாமல் காதல் இனிக்குமா—இருமனமே
சேர்ந்து
இளகாமல் இன்பம் கிடைக்குமா
கரும்பைக் கண்ட எறும்பையும் போலே
காந்தம் கண்ட இரும்பையும் போலே
கண்ணும் கண்ணும் கலந்தது தன்னாலே
மெய்க் காதலாலே
கவலையின்றி வாழ்வோம் இனிமேலே

## 9

காதல் கதைகள் பேசி பேசி கண்ணால் வலை வீசி—ஓ ராஜா
கவர்ந்தாய் சுக வாசி (காதல்)

ஏதும் அறியா இளமை உள்ளம் இனிக்கும் நிலை ஏனோ
இளகும் நிலை ஏனோ —ஓ ராஜா

இன்ப நிலாவில் தென்படும் உருவம்
எல்லாம் உன் உருவம்—ஓ ராஜா ஏங்கிடுதே பருவம்
(காதல்)

காதல் புதையலை களவே புரிந்த கள்வன் நீதானே
கபடம் அறிவேனே —ஓ ராஜா

போதும் போதும் சோதனை ஏனோ
பூங்கொடி நான்தானே—ஓ ராஜா தேன்கனி தருவனே
(காதல்)

## 10

பாடியவர்: **S. C. கிருஷ்ணன் குழுவினர்**

ஓங்கார காளி மாகாளி
உன்னையே நம்பினோம் பத்ரகாளி—நாங்க
உன்னையே நம்பினோம் பத்ரகாளி—தாயே (ஓங்கார)

பாழும் வேர்வைத் துளி பன்னீர் ஆகணும்
பசியின் வேதனை பறந்து போகணும்
கோழை ராஜாவின் மூளை திருந்தணும்
ஏழை பணக்கார பேதமெல்லாம் நீங்கணும். (ஓங்கார)

---

| | | |
|---|---|---|
| வசனம், பாடல்கள் | ... | தஞ்சை ராமையாதாஸ் |
| சங்கீதம் | ... | T. V. ராஜா |
| ஆர்ட் | ... | தோட்டா |
| நடனப் பயிற்சி | ... | வெம்படி சத்யம் |
| எடிடிங் | ... | G. D. ஜோஷி |
| ஸ்டில்ஸ் | ... | R. N. நாகராஜராவ் |
| ஒலிப்பதிவு | ... | A. கிருஷ்ணன் B. A. |
| ரிக்கார்டிஸ்ட் | ... | K. ஹரிநாத் |
| வாட் பயிற்சி | ... | ஸ்டன்ட் சோமு |
| புரொடக்ஷன் நிர்வாகம் | ... | A. புண்டரிகாக்ஷய்யா |

ஒளிப்பதிவு :
M. A. ரஹமான்

டைரக்ஷன் :
K. காமேஸ்வரராவ் B. A.

★

திரைக் கதை தயாரிப்பு

N. திருவிக்ரம ராவ்

THE B. N. K. PRESS, (PRIVATE) LTD., MADRAS—26

16257

